www.Padasalai.Net www.CBSEtips.in

V11T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

-----

வகுப்பு 11

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**14×1=14**

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**
**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1) ''கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்'' - அடி மோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ...........
அ) மதிப்புக் கூட்டுப்பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
i) அ-மட்டும் சரி ii) ஆ-மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ-தவறு, ஆ-சரி

3) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**
1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) வாடிவாசல்
3. சி.சு. செல்லப்பா - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து
i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ அ ஆ

4) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 13 ஈ) 27

5) சின்னச்சீறாவை இயற்றியவர்
அ) உமறுப்புலவர் ஆ) சீதக்காதி
இ) பனி அகமது மரைக்காயர் ஈ) அபுல்காசிம் மரைக்காயர்

6) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

7) மகிழ்ச்சியில் மைந்துறும் போழ்து ........... நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

8) Consumer - கலைச்சொல்லாக்கம் தருக.
அ) வாடிக்கையாளர் ஆ) நுகர்வோர் இ) விற்பனையாளர் ஈ) கணக்காளர்

9) பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று
அ) சிற்றில் ஆ) சாழல் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

10) அலைகடல் - இலக்கணக்குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) வினைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11) பாரதிதாசன் எழுதிய நூல்களுள் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நூல்
அ) பாண்டியன் பரிசு ஆ) இருண்ட வீடு
இ) பிசிராந்தையார் ஈ) சேரதாண்டவம்

12) அடையாறுப் பாலத்தின் சுவரில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்
அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

13) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?
அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

14) 'சுதந்திரதாகம்' என்னும் புதினத்தின் ஆசிரியர்
அ) அ.முத்துலிங்கம் ஆ) ஜெயமோகன்
இ) சி.சு. செல்லப்பா ஈ) பிரபஞ்சன்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) எதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16) சீதூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

18) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×2=4**

19) "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

20) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21) 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

22) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) செங்கயல் ஆ) நீரோடை

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**
அ) அறிந்து ஆ) செய்வான்

25) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**
கால்நடை

26) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

27) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
கனை, கணை

28) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

29) **ஒரே தொடராக மாற்றுக:**
பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்.

30) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**
அ) சாகரம் ஆ) ரசிகர்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



V11T

## பகுதி - III

### பிரிவு - 1

2×4=8

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:

31) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32) "ஏவல் மறுக்கும் சிறுவினை யாட்டி
அறிவும் ஒழுக்கம் யாண்டுணர்ந்தனள் கொல்"
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33) மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு - 2

2×4=8

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:

35) தாமஸிகம் என்றால் என்ன?

36) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

37) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

38) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

### பிரிவு - 3

3×4=12

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:

39) பிறிதுமொழிதல் அணி **(அல்லது)** சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எழுதுக:**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
  சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
  பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
  எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
  நிச்சயம் சுதந்திரம்அது வேண்டும்.

**- நாமக்கல் கவிஞர்**

41) பாடாண்திணை **(அல்லது)** பொதுவியல் திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

42) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

அ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ..............

ஆ) வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும் ..............

இ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான்; ..............

ஈ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ..............

43) **தமிழாக்கம் தருக:**

அ) You must be the change you wish to see in the world.

ஆ) Nobody can hurt me without my permission.

இ) A picture is worth a thousand words.

ஈ) Work while you work and play while you play.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



43) **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா:**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானதும் 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழு கூடல்'' என்றவிடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன ''தமிழ் இவை பத்துமே'', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுகளாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ்மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**மேற்காணும் பத்தியினைப் படித்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

அ) தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?

ஆ) பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.

இ) தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.

ஈ) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி - IV

**3×6=18**

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:**

44) அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துக்களை எழுதுக.

45) அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் ''காற்றில் கலந்த பேரோசை'' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46) அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

**4+2=6**

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:**

அ) 'அம்ம வாழி தோழி' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.

ஆ) 'நன்று' என முடியும் குறளை எழுதுக.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com